# பாஷையூர் மீனவர் இருவரை கடற்படை பிடித்தது

பக்கங்கள் நான்கு

விலை ரூபா: 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 787 பிரசோற்பத்தி ஐப்பசி 10 (27 - 10 - 1991) ஞாயிறு

## பள்ளிக்குடாவில் 4பேர் கைது

மண்டைதீவு கடற்பகுதியில் படகில் சென்று மீன் பிடித்துக்கொண்டிருந்த இரு பாஷையூர் மீனவர் கள் அப்பகுதிக்கு வந்த கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்டனர். நேற்றுக்காலை நடந்த இச்சம்பவத்தின்போது அம்பாக்கிச்சூட்டுச்சத்தம் கேட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தாவீது (32), சுந்தர் (19) ஆகிய மீனவர்களே கைதான மீனவர்களாவர். மண்டைதீவில் நிலைகொண்டுள்ள படையினரிடம் இவர்கள் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதே போல பள்ளிக்குடா கடற்பகுதியிலும் கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நால்வர் கடற்படையினரால் பிடித்துச்செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களைப்பற்றிய விவரங்கள் எதுவும் தெரியவில்லை எனவும் உறவினர்கள் தெரிவித்தனர்.
(07 - 06)

# மண்முனையில் புலிகள் தாக்கி

# ஏழு இராணுவத்தினர் பலி!

## நவீன ஆயுதங்கள் மீட்பு. இருவர் வீரமரணம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மண்முனையில் நேற்று முன்தினம் இராணுவ அணியொன்றின்மீது விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலின்போது ஏழு சிப்பாய்கள் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர்.

கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் காலை பத்து மணியளவில் முப்பத்தைந்து இராணுவத்தினர் மண்முனை நோக்கி வந்துகொண்டிருந்தனர்.

மண்முனையில் வைத்து விடுதலைப்புலிகள் வழி மறித்துத் தாக்குதல் தொடுத்தபோது ஏழு இராணுவத்தினர் அவ்விடத்திலேயே உயிரிழந்தனர்.

ஏனையோர் படுகாயங்களுடன் முகாம் நோக்கித் தப்பியோடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது

—04ஆம் பக்கம் பார்க்க

## மீட்கப்பட்ட ஆயுதங்கள்

மண்முனையில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு;

- ★ ஏ. கே. எல். எம். ஜி - 1
- ★ ரம் மகசீன் - 5
- ★ ஏ. கே. எல். எம் ஜி லின் -425
- ★ ரி. 56 2 - 1
- ★ ரி. 56. 1 - 2
- ★ ரி. 56 பட்மொடல் ஜம்

—04ஆம் பக்கம் பார்க்க

## திருகோணமலையிலிருந்து படையினர் வந்தனர்

ஓமந்தைப் பகுதியில் ஆயிரத்து ஐந்நூறு துருப்புகள் இராணுவ நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டதாக கொழும்பிலிருந்து வரும்செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தஇராணுவத்தினர் திருமலைப் பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் வவுனியாவில்

--04ஆம் பக்கம் பார்க்க

## சபையில் கேள்வி எழுப்புவது வழமையான முறையில் சர்ச்சை

பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகாவே தற்போது தலைமை தாங்குகிறார்.

அவசரகாலச் சட்ட விவாதம் நடைபெற்றபோது பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகாவே சபைக்கு தலைமை தாங்கியிருந்தார்.

இதேவேளை சபை ஒத்தி

—04ஆம் பக்கம் பார்க்க

## சார்க்மாநாட்டை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்பு

எதிர்வரும் சார்க் மாநாட்டை முன்னிட்டு கொழும்பு மாநகரில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொதுமக்

—04ஆம் பக்கம் பார்க்க

## வாசுதேவா நாணயக்கார நீதிமன்றத்தால் விடுதலை

நவசமசமாஜக்கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார எம். பி. அக்கட்சியின் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்தின ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தொழிற்சங்க தலைவர் அலவி மௌலானா உட்பட பன்னிரண்டு பேருக்கு எதிராகத்

—04ஆம் பக்கம் பார்க்க

## பால்மாவின் விலைகள் வியாழன் முதல் அதிகரிப்பு

லக்ஸ்பிறே, நெஸ்பிறே, ஹைலண்ட், அங்கர் பால்மா வகைகளின் விலை நேற்று முன்தினம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக லங்கா மில்க் பூட் கம்பனி அறிவித்துள்ளது.

உலகச்சந்தையில் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கிராம சேவகர் பிரிவுகளில் குடும்ப சுகாதார ஊழியர்

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் குடும்ப சுகாதார ஊழியர் ஒருவரை நியமிக்க சுகாதார அமைச்சு துரித நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டில் நோய்கள் பரவுவதைத்தடுப்பதற்கே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவ

— 04 ஆம் பக்கம் பார்க்க

## புங்குடுதீவு ஓய்வூதியர்கள் யாழ் நகரில் பெற ஏற்பாடு

புங்குடுதீவுப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து யாழ் நகரில் தங்கியுள்ள ஓய்வூதியம் பெறுவோர் சிலருக்கு ஆகஸ்ட், செப்டம்பர் மாதத்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் ஊரடங்கு நீக்கம்

வவுனியா மாவட்டத்தில் அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டம் இன்று அதிகாலை 5 மணிக்கு நீக்கப்படுவதாக கூட்டுப்படை செயற்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.

## வீரமரணம்

மண்முனையில் இடம்பெற்ற நேரடி மோதலில் இரண்டாவது லெப்டினன்ட் காந்தி, சயின்நாதன் ஆகியோர் வீர மரணத்தை தழுவிக் கொண்டனர். 01

## மிதிவெடியில் சிக்கினார்

கீரிமலை கூவிலுக்குச் சென்று தமது வீட்டுவளவுப் பகுதியினை சுற்றிப் பார்வையிட்டு வந்தவர் வீட்டு வாசலில் புதைத்து வைக்கப்பட்டிருந்த

— 04 ஆம் பக்கம் பார்க்க

## பெண் பொலிஸார்

தமிழீழ காவல்துறைக்கென பயிற்றப்பட்ட பெண்கள் பிரிவினர் நேற்று யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள முக்கிய இடங்களில் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## குமண கப்பல் வருகிறது

கொழும்பிலிருந்து புறப்பட்ட குமணகப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேரவுள்ளது.

இக்கப்பலில் உணவுப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கப்பலில் தபால்கள்

யாழ் குடாநாட்டில் அண்மைக் காலங்களில் சேகரிக்கப்பட்ட வெளியூர், வெளிநாட்டுத்தபால்கள் கப்பலில் அனுப்புவதற்காக நேற்று பருத்தித்துறைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இதேவேளை அடுத்துவரும் கப்பலில் குடாநாட்டுக்கான

— 04 ஆம் பக்கம் பார்க்க

★ தாய் - மகன் கருத்து வேற்றுமையின் எதிரொலி

## சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியை

# துறக்க ஸ்ரீமாவோ முடிவு!

புதிய இடது சாரி முன்னணியை அமைக்கவும் முயற்சி

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியைத் துறக்க முன்வந்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியை தனது மகன் அனுரா பண்டாரநாயக்காவிடம் ஒப்படைத்துவிட்டு, புதிய இடதுசாரி முன்னணியை அமைத்து அதற்குத் தலைமை தாங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

★ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமை தொடர்பாக தாய்க்கும் — மகனுக்கும் இடையே அண்மைக்காலமாக வளர்ந்து வந்த அரசியல் கருத்து வேற்றுமை.

★ கட்சிக்குள் தனிநபர் ஆதிக்கத்தை உருவாக்க முனைவதாகக் குற்றம்சாட்டி ஸ்ரீமாவுக்கு எதிராக கட்சி உறுப்பினர்கள் சிலரால் கொண்டுவரப்பட்டுள்ள அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை.

★ கட்சியின் செயலாளர் நாயகம் பதவி தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகளைத் தொடர்ந்து அனுரா பண்டாரநாயக்கா புதிய செயலாளர் நாயகமாக ஸ்ரீமாவின் விருப்பத்திற்கு மாறாகத் தெரியப்பட்டமை.

★ ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையில் கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான ரொனி டி மெல திலகரட்ன நடந்து கொண்ட விதம், அதனைத்தொடர்ந்து கட்சிக்குள் ஏற்பட்ட கருத்து மோதல்களின் விளைவாக அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவி, சுதந்திரக்கட்சி அங்கத்தவர் பதவி என்பவற்றைத் துறக்கத் தீர்மானித்துள்ளமை என்பனவே திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் இந்த முடிவுக்குக் காரணமெனச் சொல்லப்படுகின்றது.

## வீடமைப்புக் கடன் வழங்க 40 கோடி ரூபா நிதி

அடுத்த வருடம் வீடமைப்புக் கடனாகப் பொதுமக்களுக்கு வழங்குவதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 40 கோடி ரூபாவை இலங்கை அரசுக்கு வழங்கியுள்ளது.

குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இப்பணம் வீடமைப்புக் கடனாக வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

## 'களத்தைத்தான் இழந்திருக்கிறோம்; யுத்தத்தை அல்ல..'

அண்மையில் தமிழ்நாடு நெல்லை மாவட்டத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அங்கு வை. கோபால்சாமி பேச எழுந்ததும் அவருக்கு ஏகப்பட்ட கரகோஷம். பெருமளவு மாலைகளும் அவருக்குப் போடப்பட்டன. அவற்றில் ஒன்று சந்தன மாலை மற்றைய அரசியல்வாதிகளைப் போல் மாலையைக் கண்டதும் தயங்காமல் அவற்றை முன்னுக்கு வந்து ஏற்றுக்கொண்டார் வை.கோ.

தி.மு க.வின் தேர்தல் தோல்வி பற்றி அவர் அங்கு தனது உரையில் குறிப்பிடுகையில்......

'கவலைப்படவில்லை .....நாம் ஒரு களத்தைத்தான் இழந்திருக்கிறோம்; யுத்தத்தை அல்ல.' மாபெரும் குண்டுவீச்சில் லண்டன் பாதிக்கப்பட்டபோது சர்ச்சில், 'லண்டன் இதைத் தாங்கிக்கொள்ளும்' என்றார். 'நான் சொல்கிறேன் தி.மு க இதைத் (தோல்வியை) தாங்கிக்கொள்ளும்......'

## சைக்கிள் வியாபாரிகள் கிளிநொச்சியில் தஞ்சம்

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு சைக்கிள் மூலம் வியாபாரத்திற்கு சென்ற பல வியாபாரிகள் தற்பொழுது ஏற்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையால் யாழ்ப்பாணம் வரமுடியாமல் கிளிநொச்சிப் பகுதியில் பெருமளவு தங்கி நிற்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

● உணவு லொறிகளை சோதனையிடுவராம்

# ஆனையிறவு தடைமுகாமில் மீண்டும் பொலிஸ் சேவை!

ஆனையிறவு தடைமுகாமில் மீண்டும் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இவர்கள் கொழும்பிலிருந்து ஆனையிறவு வழியாக யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருள்களை ஏற்றிவரும் லொறிகளைச் சோதனையிடும் பணியில் ஈடுபடுத்தப்படுவர் என கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கின்றது

இப்பணிக்காக வவுனியாவிலிருந்து பொலிஸார் ஆனையிறவு தடைமுகாமுக்கு இராணுவ ஹெலிகப்டர்களில் அடுத்த சில தினங்களில் அனுப்பி வைக்கப்படுவர் எனவும் அச்செய்தி தெரிவிக்கின்றது.

## மேலதிக ஆசிரியர்களை இடமாற்ற நடவடிக்கை

பாடசாலை ஆசிரிய ஆளணி பற்றிய விவரங்கள் கல்விக் கோட்ட ரீதியாக தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது.

இந்த ஆசிரிய ஆளணியைக் கருத்திற்கொண்டு ஆசிரிய பற்றாக்குறையுள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர் நியமனம் செய்தல், இடமாற்றம் செய்தல் முதலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த ஆசிரிய ஆளணிப் பட்டியல் மூலம் மேலதிகமாகவுள்ள ஆசிரியர்களும் இடமாற்றம் செய்யப்படலாமெனத் தெரியவருகிறது (18)

## கரையில் இருந்த படகுகளும் தாக்குதலுக்குத் தப்பவில்லை

அராலி, பொன்னாலை கொத்துத் துறை ஆகிய கடற்கரை பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் பல படையினரின் பீரங்கித் தாக்குதல்களால் சேதமடைந்துள்ளன.

காரைநகரில் இருந்தும் பலாலி, ஊர்காவற்றுறை பகுதிகளில் இருந்தும் ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் அடிக்கடி நடைபெறுவதால் கடற்தொழிலாளிகள் பலர் இப்பிரதேசங்களில தொழில் புரிவதைத் தற்போது நிறுத்தியுள்ளனர். (18)

## தமிழக புதிய ஆளுநர் நியமன விவகாரம்;

# ஜெயலலிதா-டில்லி உறவில் மேலும் விரிசல்!

காவிரி நீர்ப்பிரச்சினையைத் தொடர்ந்து தமிழ்நாட்டுக்கான புதிய கவர்னர் நியமன விவகாரம் தமிழக முதல்வர் - டில்லி உறவில் மேலும் விரிசலை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்திராகாந்தி, ராஜீவ் ஆகியோருக்கு மிகவும் நெருக்கமானவரும் ஏற்கனவே தமிழக கவர்னர் ஆக இருந்தவருமான பி. சி அலெக்சாந்தரையே மீண்டும் கவர்னராக நியமிக்க மத்திய அரசு தீர்மானித்து, அது குறித்து தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் விருப்பத்தையும் சில தினங்களுக்கு முன்னர் கேட்டிருந்தது

ஆனால் அலெக்சாந்தரை கவர்னராக நியமிப்பதற்கு தமிழக முதல்வர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக டில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 1989 மார்ச் 25 ஆம் திகதி கலைஞர் ஆட்சியில் ஜெயலலிதா சட்டசபையில் தாக்கப்பட்டபோது தமிழக கவர்னராக இருந்தவர் அலெக்சாந்தர். அப்போது அவர் தி.மு.க. அரசுக்குச் சாதகமாக நடந்து கொண்டார் என்று முதல்வருக்கு ஒரு எண்ணம் உண்டு. அதனாலேயே இந்த நியமனத்துக்கு ஜெயலலிதா எதிர்ப்புத் தெரிவிக்கிறார் எனவும் சொல்லப்படுகிறது.

ஆனால் முதல்வரின் எதிர்ப்பை டில்லி ஏற்றுக்கொள்வதாக இல்லையாம். எப்படியும் அலெக்சாந்தரையே தமிழக கவர்னராக நியமிப்பதென அங்கு முடிவாகி விட்டதாம்.

இதனால் ஜெயலலிதா - டில்லி உறவில் மேலும் ஒரு விரிசல் ஏற்படும் நிலை தவிர்க்க முடியாததாகி வருகிறதாம்.

## சென்னை தமிழ் நாடகங்கள் ரூபவாஹினியில் மறுஒளிபரப்பு

ரூபவாஹினியில் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட தமிழ்த் தொலைக்காட்சி நாடகங்களை ஒளிபரப்புவதற்கான புதிய முயற்சியொன்று எடுக்கப்பட்டுள்ளது.

சென்னைத் தொலைக்காட்சிச் சேவையில் ஏற்கனவே ஒளிபரப்பப்பட்ட தமிழ் நாடகங்களே இங்கு மறு ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளன.

இதன்பொருட்டு இங்கு ஒளிபரப்புவதற்குத் தகுதியான நாடக வீடியோ கசெட்டுக்களைத் தெரிவு செய்வதற்கென ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த குழுவொன்று விரைவில் சென்னை செல்லவுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

## ஏழு மாதங்கள் சம்பளம் இல்லை

வடபிராந்திய போக்குவரத்துச் சபை வவுனியா டிப்போ ஊழியர்கள் சுமார் 200 பேருக்கு கடந்த ஏழு மாதங்களாக வேதனம் வழங்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது. (18)


சிறுவிளம்பரம்

சோதிடம்

தீராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், விவாகம் நடவாமை போன்ற கவலைகள் நீங்கி அதிர்ஷ்டத்துடன் வாழ சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெற உத்தரவாதம் ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம் (ஸ்ரீ வீரமாகாளி கோவலடி) நல்லூர்

10037

## 1980 வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்ட தனியார் துறை ஊழியர்க்கும் நிவாரணம்!

1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம் பெற்ற வேலை நிறுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தனியார்துறை ஊழியர்களுக்கும் நிவாரணம் வழங்குமாறு அரசு தனியார் தொழில் நிலையங்களைப் பணித்துள்ளது.

இந்த வேலை நிறுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு ஏற்கனவே நிவாரணம் வழங்கப்பட்டு விட்டமை தெரிந்ததே.

அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டதையொத்த நிவாரணமே பாதிக்கப்பட்ட தனியார்துறை ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளது.

## ஏழுதினங்களும் திறக்கப்படும்

நல்லூர் ப.நோ.கூ.சங்கத்தின் சகல கிளைகளும் காலை 8 மணிமுதல் நண்பகல் ஒரு மணிவரையும், பின்னர் பிற்பகல் 2 மணிமுதல் மாலை 6 மணிவரையும் வாரத்தில் ஏழுதினங்களும் திறந்திருக்குமென சங்கத்தலைவர் அறிவித்துள்ளார்.

## நவம்பர் 4 முதல் 30 வரை குடாநாட்டில் மரநடுகைக் காலம்

இவ்வருட மழைகாலத்தில் குடாநாடு முழுவதும் பெருந்தொகையான மரக்கன்றுகளை நடுவதற்குரிய நடவடிக்கைகளைத் தமிழீழ ஆய்வு நிறுவனம் எடுத்துள்ளது.

இவ்வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மில்க்வைற் தொழிலகம், அண்ணா தொழிலகம் உட்படப் பல நிறுவனங்களின் பங்களிப்பும், உதவிக் கல்விப் பணிப்பாளரின் வழி நடத்தலின் கீழ் குடாநாட்டில் சுமார் 60 பாடசாலைகளின் மாணவர்களதும், ஆசிரியர்களதும் ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளது. இப்பாடசாலைகளில் பெருந் தொகையான மரக்கன்றுகளை உற்பத்தி செய்வதற்கான வேலைத்திட்டத்திலும் இந்நிறுவனம் ஈடுபட்டுளளது.

இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் மரக்கன்றுகளைப் பாடசாலை மாணவர்களூடாகப் பாடசாலைச் சூழலிலும், பொது இடங்களிலும் நடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நவம்பர் 04 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியை மரம் நடுகைக் காலமாகச் செயற்படுத்துவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழீழ ஆய்வு நிறுவனம் மர நடுகைக்காகப் புளி, இப்பில் - இப்பில், திருக்கொன்றல், இலவம், மரமுந்திரிகை அகத்தி. பலா ஆகிய பயன் தரு மரக்கன்றுகளை நடுவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றது. இம்மர நடுகைக் காலத்தில் மரக்கன்றுகளை உற்பத்தி செய்து தருவதற்கும், நட்டுப் பராமரிப்பதற்கும் ஆர்வம் உடையவர்கள் இணைந்து செயற்பட வருமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## டாக்டர் இடமாற்றம்

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றும் டாக்டர் எஸ் யோகராசா சங்கானை அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாக இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார். (13)

## 7 தலைவர்களும் பங்கு பற்றுவர்

எதிர்வரும் நவம்பர் மாத முதல் வாரத்தில் நடைபெறவுள்ள கொழும்பு சார்க் மாநாட்டில் ஏழு உறுப்பு நாடுகளின் தலைவர்களும் பங்கு பற்றுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# செய்தி உலகம்

## வெரித்தாஸில் வர்த்தக ஒலிபரப்பு

ஆசிய கத்தோலிக்க ஆயர்கள் பேரவையினால் மனிலாவிலிருந்து ஒலிபரப்பப்படும் 'வெரித்தாஸ்' வானொலி பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கான அதன் உள்ளூர் சேவையை வர்த்தக ஒலிபரப்பாக மாற்றியுள்ளது. தற்பொழுது 11 மொழிகளில் 'வெரித்தாஸ்' நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறது. நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவே பிலிப்பைன்ஸ் உள்ளூர் சேவை வர்த்தக சேவையாக்கப்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸ் முழுவதும் 40 நிலையங்களைக் கொண்டுள்ள 'வெரித்தாஸ்' வானொலி பெரும் தொழில் அதிபரும், ஜனாதிபதி அக்கினோவின் மருமகனுமான அந்தோனியோ கோஜீப்வாங்கோவின் நிதியுதவியுடன் வெகு விரைவில் முதற்தரமான அலைவரிசையுடைய ஒரு சக்தி வாய்ந்த பெரும் தொடர்பு நிலையமாகப் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. (16)

## சீனாவின் முதல் எதிரி

சீனா தனது நாட்டின் இன்றைய முதல் எதிரி எலிகள் தான் என்று அறிவித்து, எலிகளைக் கொல்பவர்களுக்கு உடனுக்கு உடன் ஊதியம் வழங்குவதுடன், தொகையாகக் கொல்பவர்களுக்கு விலை உயர்ந்த கடிகாரம், வானொலிப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி ஆகியவற்றையும் ஊக்குவிப்பு போனஸ் ஆக வழங்குகிறது. இதனால் பலர் எலிகளை வேட்டையாடுவதை ஒரு தொழிலாக அங்கு மேற்கொண்டுள்ளார்கள். (16)

## தட்சர் எழுதும் இரு நூல்கள்

தாம் பிரதமராக இருந்த 11 ஆண்டு கால நினைவுகள் குறித்து முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரட் தட்சர் இரு நூல்களை எழுதுகிறார்.

இதில் முதல் நூல் 1993 ஆம் ஆண்டு இறுதியில் வெளியிடப்படும் என இதனைப் பிரசுரிக்கும் ஹார்ப்பர் கொலின்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. இதற்காகத் தட்சருக்கு 42 லட்சத்து 50 ஆயிரம் டொலர் (17 கோடியே 85 லட்சம் ரூபா) கிடைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. 21)

## ஜப்பானியரை கவர்ந்த 'காந்த ரயில்'

ஜப்பானில் டோக்கியோவுக்கும், ஒஸாகாவுக்கும் இடையே காந்தத்தில் ஓடும், தொங்கும் ரயில் 1982 ஆம் ஆண்டில் இருந்து ஓட விடப்பட்டிருக்கின்றது. இந்த இரண்டு நகரங்களுக்கும் இடையே உள்ள 322 மைல் தூரத்தை இந்த 'மாக்னெடிக்' ரயில் ஒன்றேகால் மணி நேரத்தில் கடந்து விடுகிறது. இதிலும் பார்க்க வேகமாக ஓடக் கூடிய ரயில்கள் இப்பொழுது ஜப்பானில் ஓட விடப்பட்டிருந்த போதிலும் இந்த ரயிலுக்கு விசேட மதிப்பு! ஏன் என்றால் இந்த ரயில் ஓடத் தொடங்கிய நாளில் இருந்து இற்றைவரை ஒரு சிறு விபத்தும் ஏற்படவில்லை. அதனால் டோக்கியோ மக்கள் இதன் 10ஆவது ஆண்டு நிறைவு விழாவை இவ்வருடக் கடைசியில் வெகு விமரிசையாகக் கொண்டாடுவதற்கான ஆயத்தங்களைச் செய்து வருகிறார்கள். (16)

## நாதயோகிக்கு நல்லையில் பெருவிழா!

நாதஸ்வர மேதையின் அறுபதாண்டுப் பூர்த்தித் திருக்கல்யாண வைபவம் பெருவிழாவாக 14 - 10 - 91இல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றது.

ஆலயங்கள்தோறும் மங்கலவாத்தியம் இசைத்துத் தொண்டாற்றும் அன்பரது திருக்கல்யாணத்தைச் சிறப்பிக்கக் குருக்கள்மார் நூறுபேர்வரை வந்து பங்குகொண்டனர். ஆலயங்களிலோ அல்லது வேறு திருக்கல்யாண வைபவங்களிலோ காணமுடியாத அற்புதங்களை இக் கல்யாணத்திலே நாம் காண முடிந்தது.

நூற்றிருபது கும்பங்களாலும் மணிவிழாக் காணும் மணமக்களுக்கு அபிஷேகம் நடைபெற்றது. வாழ்வில் அறிந்தும் அறியாதும் செய்த தோஷங்கள் ஏதாவதிருப்பின் அவை நீங்கி சரீரமும் ஆன்மாவும் புனிதமடையச் செய்வதே இவ்வபிஷேகத்தின் குறிப்பாகும்.

அதன் பின்னர் மணமகன் பட்டுவேட்டிசால்வையும், மணமகள் கூறையும் உடுத்து வந்து மணவறையில் அமர்ந்தனர். அந்தணர்கள் ஆசிவழங்கும் வைபவம் மிகச் சிறப்பாக நிகழ்ந்தபின்னரே மாங்கல்யதாரணம் இடம்பெற்றது. ஏனைய திருமணங்களில் தாலிகட்டிய பின்னரே வாழ்த்துவது மரபு. இங்கே வாழ்த்திய பின்னரே தாலிகட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

பின்னர் தானங்கள் வழங்கப்பெற்றன நான்கு சிவாசாரியர்களுக்குச் சிவலிங்கதானம், சுவர்ணதானம் என்பன கொடுக்கப்பட்டன. அறுபது குருக்கள்மாருக்குத் தானங்கள் வழங்கிய சிறப்பும் பாராட்டுக்குரியதாகும்

இக்கல்யாண வைபவத்தின்போது நாதஸ்வரக் கலைஞர்கள் எண்பதுபேர்வரை திரண்டு மங்கல வாத்தியங்களை இசைத்த காட்சியும் வேறெங்கும் கண்டிராத அற்புதக் காட்சியாகும். ஒரு மாபெரும் கலைஞர்மீது ஏனைய கலைஞர்கள் கொண்டிருந்த அபிமானத்தை எடுத்துக்காட்டுவதாக அது அமைந்தது.

இக்கல்யாண வைபவக் கிரியைகளை நெறிப்படுத்தும் பணியைச் சிவஸ்ரீ மகாதேவக்குருக்கள் ஏற்று நடாத்தினார். பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளே பிரதம குருக்களாக அமர்ந்து திருக்கல்யாணத்தை வேதவிதிப்படி நிறைவு செய்தனர்.

இதற்கென விசேடமாக வீதியையும் உள்ளடக்கி அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்தன. பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடிநின்று விழாவைக் கௌரவித்தனர். மலர் மாலைகள் அணிந்தும், பொன்னாடைகள் சாத்தியும், தங்கப் பதக்கங்கள் அணிந்தும், பரிசில்கள் நல்கியும் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். பலர் இசைக் கருவிகள் பதித்த கேடயங்களும் பரிசில்களாக வழங்கப்பெற்றன. அவற்றுள் கானமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரர்கள் வழங்கிய மிகப்பெரிய கேடயம் குறிப்பிடத்தக்கது. அக்கேடயத்தின் மேற்புறத்தில் ஓங்கார வடிவத்தினுள் வீணாகானம் செய்யும் சரஸ்வதி தேவியை நாம் காணமுடிந்தது. நாதஸ்வரக் கலைஞர்கள் வாசிக்கும் குழலின் அளவில் அமைந்த நாதஸ்வரம் நடுநாயகமாகக் காணப்பட்டது. தவில் முதலிய ஏனைய இசைக் கருவிகளும் இடம்பெற்றன. நீள் சதுர வடிவில் அமைந்த அக்கேடயத்தின் நான்கு ஓரங்களும் அலங்கார வேலைப்பாட்டுடன் கூடியவை. எவர்சில்வரால் செய்யப்பட்ட அக்கேடயம் மின்குமிழ் ஒளியில் வெள்ளிமயமாகப் பிரகாசித்து அனைவரது கண்ணையும், கருத்தையும் கவர்ந்துகொண்டிருந்தது.

இவ் விழா திரு. பத்மநாதன் அவர்களுக்கு எடுக்கப்பட்ட விழா என்பதிலும் பார்க்க ஒரு கலைஞனுக்கு ஒரு கலைக்கு அளிக்கப்படும் கௌரவம் என்றே கொள்ளுதல் வேண்டும். ஈழத்தின் வரலாற்றில் வேறு எந்தக் கலைஞனுக்கும் இத்தகைய பாராட்டு விழா நடைபெற்றதில்லை. இம்மணி விழாவை ஒழுங்கு செய்த குழுவினர் தமிழ்கூறு நல்லுலகத்தின் பாராட்டுக்குரியவர்களாவர்.

மூன்று நாட்கள் தொடர்ந்து நடந்த இவ்விழாவில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அவைபற்றிய கட்டுரைகள் முரசொலியில் தொடர்ந்து வெளிவரும்.

காலஞ்சென்ற தவில்மேதை என். ஆர், சின்னராசாவின் புதல்வர்கள் ரவியும், சுதாவும் அழகிய சிற்ப வேலைப்பாடமைந்த கேடயத்தில் பதித்த தங்க நாயனத்தை மணிவிழா நாயகருக்குப் பரிசாகத் தந்தனர்.

(வளரும்)

## தென்மாகாணத்தில் ஆசிரிய இடமாற்றம் இல்லை

தென் மாகாணத்தில் 1992 ஜனவரி மாதம் வரை ஆசிரிய இடமாற்றங்கள் செய்யக் கூடாது என தென் மாகாண சபை கல்வி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

அடிக்கடி இடம்பெறும் ஆசிரிய இடமாற்றங்களால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக தென்மாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் பீ. வை. துடாவை சுட்டிக் காட்டியதையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 08

## வடமாகாண ரீதியான கரபந்தாட்டப் போட்டி

அரியாலை காந்தி விளையாட்டுக்கழகம் நடாத்தும் வடமாகாண ரீதியிலான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் சம்பியன் கிண்ணத்துக்கான இறுதி விளையாட்டுக்கள் இன்று 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 30 மணிக்கு அரியாலை காந்தி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

செற் அப் முறையிலான போட்டியில் பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும், புத்தூர் ஆவரங்கால் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன

ஓவர் கேம் போட்டியில் வண்ணார்பண்ணை வள்ளுவன் விளையாட்டுக்கழகமும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன 25

## யாழ் தபால் சேவையும் தரைமார்க்கமாக?

யாழ்ப்பாணத்திற்கான தபால்களை தரைமார்க்கமாக கொழும்பிலிருந்து அனுப்பி வைப்பதற்கு தபால் திணைக்களம் ஆலோசித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசாங்க அறிவித்தல்கள் சுற்று நிருபங்கள் வர்த்தமானிகள் என்பன காலதாமதமாகவே யாழ்ப்பாணப் பகுதிக்கு கிடைப்பதாலும் கண்டி வீதி - ஆனையிறவு ஊடாக போக்குவரவு நடைபெற விருப்பதாலும் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. 06

## ஹாட்லி புலமைப்பரிசிலுக்கு கொழும்புஉதவிமேயர்உதவி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி புலமைப்பரிசில் நிதிக்காக கொழும்பு மாநகர சபை உதவி மேயர் கே. கணேசலிங்கம் ஒரு லட்சம் ரூபாவுக்கான காசோலையை வழங்கியுள்ளார்.

இக் கல்லூரி பழைய மாணவர் சங்க கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றபோது அதன் உப தலைவர் கணேசலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

இக்கல்லூரியிலிருந்து பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கும் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறுவதற்கான வசதியற்ற மாணவர்களுக்கும் இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது (06)

---

**கிராம...**

தாக சுகாதார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் தெரிவித்தார்.

இதேவேளை ஆறாயிரம் பேருக்கு ஒருவர் என்ற அடிப்படையில் பொது சுகாதார பரிசோதகர்களை நியமிப்பது பற்றியும் அமைச்சு ஆராய்ந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

**வாசுதேவா...**

தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் அனைவரும் கொழும்பு மேல் நீதிபதியால் விடுதலை செய்யப் பட்டனர்.

1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கோட்டையில் சட்ட விரோதமாக கூடினார்கள், சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தனர், பொதுமக்கள் சிலருக்கு காயம் விளைவித்தனர் என்பன உட்பட 14 குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன

---

**மிதிவெடியில்...**

மிதிவெடியில் அகப்பட்டு வலது காலை இழந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

கீரிமலை கூவிலைச் சேர்ந்த வேலன் கதிர்காமத்தம்பி (40) என்பவரே மிதிவெடியில் சிக்கியவராவர் 07

---

**சபையில்...**

வைப்பு நேரம் கேள்வி எழுப்புவதுக்கு வழமையாக பின்பற்றி வந்த முறையில்சர்ச்சை தோன்றியிருப்பதால் கட்சித் தலைவர்கள் பிரதி சபாநாயகரைச் சந்தித்துடபேசினர்.

# ஊர்காவற்றுறைப் பகுதியில் பொதுமக்களின் வாகனங்கள்

கடந்த வருடம் தீவகப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட லொறிகள், டிராக்டர்கள் ஊர்காவற்றுறைப் பகுதியில் அவர்களால் பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட அனேகமான வாகனங்கள் அழிக்கப்பட்டும், பழுதான நிலையிலும் இருப்பதாகவும் அறியப்படுகிறது.

இதேவேளை தீவகப்பகுதி இராணுவ நடவடிக்கையால் கைது செய்யப்பட்ட இளைஞர் 80பேரின் நிலை மர்மமாக இருப்பதாகவும் அறியப்படுகிறது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் இரு தடவை முயற்சிகள் மேற்கொண்டும் தோல்வியில் முடிவடைந்ததும் குறிப்பிடத்தக்கது. 01

## வங்கி ஊழியர் கலந்துரையாடல்

யாழ்மாவட்டத்தில் கடமையாற்றும் இலங்கை வங்கி மக்கள் வங்கி, தேசியசேமிப்பு வங்கி, ஹற்றன் நாஷனல் வங்கி, வர்த்தக வங்கி ஊழியர்கள் அனைவரையும் இன்று காலை 10 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்கு சமுகமளிக்குமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்டம் அறிவித்துள்ளது.

---

**புங்குடுதீவு...**

துக்குரிய ஒய்வூதியத்தைப் பெறுவதற்கு யாழ் நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ் நகரில் தற்காலிகமாக இயங்கிவரும் புங்குடுதீவு கிராமிய வங்கியில் இவற்றைப் பெறலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

புங்குடுதீவு - நயினாதீவு பல நோ. கூ. சங்கக் கிராமிய வங்கியில் ஒய்வூதியம் பெறுவோருக்கே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 33

---

**சார்க்...**

களும் இம்மாநாடு திறம்பட நடைபெற ஒத்துழைப்புத்தருமாறும் அவர் கேட்டுள்ளார்.

இது தொடர்பான உயர் மட்ட மாநாடு கொழும்பில் நடைபெற்றது.

---

**பால்மா**

டிருப்பதாலேயே இவை அதிகரிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி 500 கிராம் லக்ஸ்பிறே 50 ரூபாவிலிருந்து 56 ரூபாவாகவும், 1 கிலோ லக்ஸ்பிறே 6 ரூபாவாலும், 250 கிராம் லக்ஸ்பிறே 3 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது

இதே போல 400 கிராம் நெஸ்பிறே 4 ரூபா 50 சதத்தாலும், ஹைலண்ட் 400 கிராம் 5 ரூபாவாலும் அதிகரித்துள்ளது.

அங்கர் பால்மா 400 கிராம் 5 ரூபாவாக அதிகரித்துள்ளது 1 கிலோ, 2 கிலோ ரின் வகை விலையில் எதுவித மாற்றமும் இல்லை எனவும் தெரிவிக்கப் படுகிறது.

## உணவுப்பொருள் வழங்குதல் பொதுமக்களுக்கு அறிவித்தல்

அத்தியாவசிய பண்ட நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்த மண்ணெண்ணெய் அந்நிரலில் இருந்து நீக்கப்பட்டும் விற்பனைக்கட்டுப்பாட்டில் இருந்தும் விலக்களிக்கப்பட்டும் உள்ளது என செயிட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்,

தேனீர்க்கடை, பலகாரம் சுட்டுவிற்போர் விசேட வைபவங்களுக்கு குறித்துரைத்த பண்டங்கள் தேவைப்படுவோர் தத்தம் பகுதியிலுள்ள பிரதேச நுகர்வோர் பாதுகாப்புக் குழுவினரிடம் தமது தேவையினை எண்பித்து சிறப்பு அனுமதியினைப் பெறுவதன் மூலம் தனியார் வர்த்தகர்களிடம் பொருள்களை கொள்வனவு செய்தல் இயலும்.

வைத்திய சாலைகளில் தங்கி சிகிச்சை பெறுவோரது சீனி, தேயிலை, லக்ஸ்பிறே ஆகியவற்றினது தேவையினை பூர்த்தி செய்வதற்காக வைத்தியசாலை நலன்புரிச் சங்கங்கள் வர்த்தகத்திணைக்களம் மூலம் இப்பொருள்களை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்ய பட்டுள்ளது

அத்தியாவசிய பண்ட நிரலில் பால்மா வகை என குறிக்கப்பட்டிருப்பது பின் வருவனவற்றை மட்டுமே உள்ளடக்குகிறது:-

அங்கர், லக்ரோஜன், நெஸ்பிறே, லக்ஸ்பிறே, எஸ், எம். ஏ. இப்பொருள்களை கொள்வனவு செய்வதற்கு குழந்தையின் பிறப்பை உறுதிப்படுத்தும் ஏதேனும் சான்று ஆவணம் ஒன்றை கிராமியமட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவினரிடம் சமர்ப்பித்து அனுமதி பெற்று பால்மா கொள்வனவு செய்தல்இயலுமானது.

பங்கீட்டு அட்டவணையில் ஐவரிற்குக் கூடுதலாகவுள்ள குடும்பங்கள் விரும்பின் மேற்பட்ட ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் ஒரு கிலோ அரிசியையும் 500 கிராம் மாவையும் அதிகரித்த பங்கீட்டு அளவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்விவரங்களையிட்டு வேண்டிய நடவடிக்கைகளை வகுத்துக்கொள்வதற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்கள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு கூடி ஆராயவிருக்கிறது இவ்வாறு பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**பெண்...**

முக்கிய கேந்திர நிலையங்களில் தங்களது கடமையினைப் புரிந்ததைக் காணக் கூடியதாக இருந்தன

நீலச் சீருடை அணிந்தும் தொப்பி அணிந்தும் காணப்பட்டனர். (07)

---

**மண்முனையில்...**

இந்த மோதலின் போது படையினர் பெருமளவு ஆயுதங்களையும் போட்டு விட்டு ஒடியதாகவும் புலிகளால் அவை மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

---

**மீட்கப்பட்ட...**

பாக்கி - 1

★ ஏ. கே. மகசின் - 19

★ ஏ. கே. துப்பாக்கி எறிகணை - 3

★ ஐ எம். ரவைகள் - 550

★ தொலைத் தொடர்பு கருவி - 1

★ ஜே. ஆர் ரக கைக் குண்டுகள் -1 01

## நாளை கூட்டம்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட தெல்லிப்பளை, அம்பனை, அளவெட்டி, மல்லாகம், காங்கேசன்துறைக் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர்களையும், ஆசிரியர்களையும் நாளை திங்கட்கிழமை பி. ப. 1 மணிக்கு மகாஜனாக்கல்லூரி மண்டபத்தில் நடக்கவிருக்கின்ற கருத்தரங்கில் தவறாதுகலந்து கொள்ளும் வண்ணம் பிரதிக் கல்விப்பணிப்பாளர் வேண்டியுள்ளார்.

---

**கப்பலில்...**

வெளியூர் தபால்கள் வந்து சேரும் என எதிர்பார்க்கப் படுவதாகவும் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. 06)

---

**குமண...**

பொருள்கள், எரிபொருள்கள், தபாற்பொதிகள், ஆஸ்பத்திரிக்குத் தேவையான மருந்து வகைகள் இக்கப்பலில் வருகின்றது.

கொழும்பு சிகிச்சைக்காகச் சென்று சிகிச்சை பெற்ற நோயாளர்களும் இக்கப்பலில் வருகின்றனர். (07)

---

**திருகோணமலை...**

குவிக்கப்பட்டு அங்கிருந்து முன்னேறி தற்போது ஒமந்தை நொச்சிமோட்டைப் பகுதியில் இருப்பதாககவும் கூறப்படுகிறது 01

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சவீதி 'லஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 27-10-91 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.